www.prepp.in

Prepp
Your Personal Exams Guide



# TAMIL

## ( COMPULSORY )

*Time allowed : **Three** Hours*

*Maximum Marks : 300*

---

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*All questions are to be attempted.*

*The number of marks carried by a question is indicated against it.*

*Answers must be written in **TAMIL** (Tamil script) unless otherwise directed in the question.*

*Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks will be deducted.*

*Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

---

**Q1.** **பின்வருவனற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 600 சொற்களில் கட்டுரை எழுதுக.** ***100***

(அ) அரசியலில் பெண்களின் பங்கு.

(ஆ) சீனப் பொருளாதார வளர்ச்சி குறித்து இந்தியா அஞ்ச வேண்டுமா ?

(இ) இந்தியச் சமூகத்தில் மணவிலக்கு அதிகரித்து வரும் நிலை.

(ஈ) கடுமையான சட்டங்கள் ஒழுக்கம் நிலவ உதவுமா ?

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

**Q2.** **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும் சரியாகவும் சொந்த நடையில் விடை எழுதவும்.** *12×5=60*

கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் தேடுவது அல்லது வேளாண்மை புரியத் தக்க நிலம் தேடுவது, கொடுங்கோன்மை அல்லது சித்திரவதையிலிருந்து தப்பிப்பது, நம்பிக்கை அல்லது பேச்சுச் சுதந்திரத்தை நாடுவது, வெவ்வேறு இடங்களில் அலைந்து திரிவதில் விருப்பம் போன்ற காரணங்களால் மனித இனம் குழுகுழுவாக ஒரு நிலப்பகுதியிலிருந்து வேறு நிலப் பகுதிக்கு இடம் பெயரத் தொடங்கிய போதே பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உலக அளவில் மக்கள் குடியேற்றம் தொடங்கிவிட்டது. அவ்வாறு குடியேறியவர்கள் தம்மோடு தமது பண்பாட்டு உடைமைகளையும் சுமந்து வந்தனர். அவர்கள் அவற்றைத் தாம் குடியேறிய இடங்களிலோ அங்கு வந்து சேர்ந்த வழிகளிலோ வளர்த்தெடுக்க முற்பட்டனர். தமது வழிகளில் போர் அல்லது வணிகம் அல்லது திருமணம் அல்லது பொது முயற்சி முதலிவவற்றின் வாயிலாகப் பிற இனங்களோடு கலந்துவிட்டனர். இம்மாற்றத்தால் தொடக்கத்தில் எதிர்ப்பும் பதற்றமும் ஏற்பட்டாலும் காலம் செல்லச் செல்ல அமைதி நிலவலாயிற்று. அமைதிக்கான கலைகளும் கைவினைகளும் வளம்பெற்றன. கொடுத்துக் கொள்ளுதல் என்னும் உறவுநிலை மலர்ந்தது. சுதந்திரமான சூழ்நிலையில் எந்த ஒரு பண்பாட்டின்

Prepp
Your Personal Exams Guide

வல்லாண்மையும் இல்லாமல் ஒவ்வொரு குழுவும் பல்லினச் சமுதாயமாக வளர்ச்சியுற்றது. இவ்வாறு மங்கோலிய மக்கள் அலஸ்காவிற்கும், ஆங்கிலோ. சாக்சன் மக்கள் பிரிட்டனுக்கும் குடிபெயர்ந்தனர். தெரிவுசெய்த சிலரை மோசசு என்பவர் கனான் நிலப்பகுதிக்கு வழிநடத்திச் சென்றிருக்கலாம் அல்லது உறுதியளிக்கப்பட்ட நிலப்பகுதியைத் தேடி அவர்கள் சென்றிருக்கலாம். இவ்வாறே ஐரோப்பாவின் நாடுகளைக் கொலம்பஸ் கண்டறிந்தது உலகச் சாதனையாக அமைந்தது எனலாம். அதன் பிறகு காலனியாதிக்கம் என்பது பிற நாடுகளை வெல்லும் சாதனமாக மாறியது. பிற பண்பாடுகளையும் வென்றவர்கள் தமது மேலாதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தனர். வணிகமும் தொழிலும் பேரளவிலான குடியேற்றத்திற்கு இன்று வலிமையான நோக்கமாக அமைந்துள்ளன. இவையெல்லாம் பண்பாட்டுக் கலப்புக்கான காரணங்கள் ஆகும். ஒவ்வொரு குழுவும் முன்னோர் இயல்பூக்கத்தை, மூதாதையர் வீடுமிது ஈடுபாடு, போகம் போன்றவற்றைக் குறிப்பிட்ட காலம் வரை அல்லது ஓரிரு தலைமுறைகள் வரை பேணி வருகின்றனர். பின்னர் அத்தகைய ஈடுபாடுகளின் சுவடே தெரியாமல் போய்விடுகிறது. வேறுநாட்டில் உள்ள நிலையை முன்கூட்டியே அறிய முயலும் போது உலக மக்களிடையே தமது பழைய நாட்டு ஈடுபாடு அருகிலேயே காணப்படுவது தெளிவாகும். ஒரு குறிப்பிட்ட

www.prepp.in

நேரத்தில் நீங்கள் எங்கு வாழ்கிறீர்களோ அந்த இடம்தான் உங்கள் இடமாக ஆகிவிடுகிறது. புதிய இடத்தின் தாவரங்களும் விலங்குகளும் உங்களுக்குப் பழக்கமாகி விடுகின்றன. உங்கள் இடம் குவலயத்தோடு இணைந்து விடுகிறது. பழைய அடையாளத்தைப் பேணுபவர்கள் மிகச் சிலராகத்தான் இருப்பார்கள். புதிய பரவலாக்கம் எல்லா இடங்களிலும் உள்ள அமைப்பைச் செப்பனிட்டு விடுகிறது. முன்பே உருவான தலைமுறைகள் முற்போக்குடையனவாக, இழந்த அடையாளங்கள்ள மறந்தவர்களாக அல்லது அவற்றில் ஈடுபாடு அற்றனவாக உள்ளன. எந்த ஆணோ பெண்ணோ நீண்ட காலம் தனிமையிலோ எந்த இனப் பண்பாடும் இன்றியோ இருந்துவிட முடியாது. குவிமைய, புவியீர்ப்புச் சக்திகள் உடனே செயல்படத் தொடங்கிவிடும். எண்ணற்ற தலைமுறைகள் ஒவ்வொரு குடிமகனும் தனது நம்பிக்கையில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து வந்துள்ளன. புறச் செல்வாக்குகளைத் தவிர்க்க வேண்டுமெனப் பிரார்த்தித்துள்ளன. இருந்த போதிலும், உணர்ச்சி மிக்க, எளிதில் உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்யக் கூடிய, எதிர்பாரா விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய சுதந்திரம் என்பது பிறரைச் சார்ந்த ஒன்றாக அனமந்து விடுகிறது. மரபணுக்கள் இறுகிப் பின்னிப்பட்டுள்ளன. ஒவ்வொரு நரம்பும் முன்பு நிகழ்ந்த அனைத்தையும் நினைவில் கொண்டுள்ளது.

www.prepp.in

உடலும் உள்ளமும் ஆன்மாவும் பிறர் எண்ணுவதை, சொல்வதை, செய்வதை ஏற்க ஆயத்தமாக உள்ளன. அறியாமையே அச்சத்தை விளைக்கிறது. அச்சம் வெறுப்பை விளைக்கிறது. வெறுப்பு தன்னம்பிக்கையை அழிக்கிறது. எல்லா அழிவுகளுக்கும் வழிகோலுகிறது. பல தொன்மையான பண்பாடுகள் கடந்த காலங்களில் இத்தகைய முடிவுகளையே கண்டுள்ளன. அடுத்தவன் நரகமே ஆனாலும் ஒருவன் வாழவேண்டுமானால் அடுத்தவரை ஏற்று இணைத்துக்கொள்ள வேண்டும்.

**வினாக்கள் :**

(i) குடியேறிய மக்கள் தாம் குடியேறிய பகுதிகளில் உள்ள மக்களிடம் முதலில் எப்படிப் பழகுவர் ? 12

(ii) முற்காலங்களில் மக்கள் இடம் பெயர்ந்ததன் காரணங்கள் யாவை ? முற்காலக் குடியேற்றத்திலிருந்து இக்காலக் குடியேற்றம் என்ன காரணங்களில் வேறுபட்டுள்ளன ? 12

(iii) பண்பாடுகள் ஒன்றோடு ஒன்று எவ்வாறு கலக்கின்றன ? 12

(iv) பல தொன்மையான பண்பாடுகள் தமது முடிவை எப்படி எட்டியிருக்க முடியும் ? 12

(v) ஒரு பண்பாடு தனித்திருக்க முடியாது என்று கூறுவதற்கான காரணம் என்ன ? 12

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

**Q3.** பின்வரும் பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. தலைப்பு இடத் தேவை இல்லை. 60

நாம் ஒரு வேலைக்கு விண்ணப்பிக்கும் போதும் நம்வரலாறு எழுதும் போதும், நமது அனுபவம், நமது பின்னணி, மற்றும் நம்மைப் பற்றிய எல்லா நல்ல செய்திகளையும் முன்னிலைப்படுத்த முனைகிறோம். தமது பணி வாழ்க்கையில் எதிர்கொண்ட சிரமங்களைப் பலரும் மறந்து அவர்களது பெருஞ் சாதனைகளை முதன்மைப்படுத்துகின்றனர். பணியமர்த்தம் செய்வோர் அத்தகைய விவரக் குறிப்புக்களைப் படிக்கும்போது ஒவ்வொருவரும் தம்மை இந்த உலகத்தில் வாழ்ந்த எவரினும் மேலானவராக வருணிக்கிறார்கள் என்றே கருதுவர். பணியைப் பெற நாம் எவ்வகையில் தகுதி மிக்கவர்கள் என்பதைக் காட்டவே முயலுகின்றனர். உலகியலின் எடுத்துக்காட்டுப் போக்காக இது திகழ்கிறது.

இது தொடர்பில் விளையாட்டு உலகில் ஓர் உண்மைக் கதை ஒன்று உள்ளது. ஒரு பல்கலைக்கழக் கால்பந்து அணி ஓட்டப்பயிற்சி எடுத்துக்கொள்வதில் ஈடுபட்டிருந்தது. ஒரு விளையாட்டு வீரர் நடுக்கோட்டுத் தடுப்பு நிலையில் இருந்தார். அவர் அந்த அணியில் நடுக்கோட்டிவருந்து உதைக்கப்படும் பந்தைத் தடுப்பதிலும் அதனை முன்னேறாமல் திருப்பி எதிர்ப்புறம் அனுப்புவதிலும் விரைவான திறமையான ஆட்டக் காரராகக் கருதப்பட்டார். ஒரு நாள், அவர் தனது பயிற்சியாளர்

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

வரை நடந்து சென்று வேகமாக ஓடிப் பந்தைக் தடுக்கலாமா என்று கேட்டார். பயிற்சியாளர் அதற்கு இசைந்தார்.

அந்த விளையாட்டு வீரர் ஓட்டப்பயிற்சிக்காக ஒவ்வொரு நாளும் வெளியே சென்றுவிட்டுத் தாமதமாக ஆடுகளத்திற்கு வருவார். தோற்றாலும் கூட நாளுக்கு நான் வேகமாக ஓடுவதைத் தொடர்ந்து கொண்டிருந்தார், நடுக்கோட்டுக்குப் பக்கத்தில் நின்று தடுக்கும் நிலையில் உள்ள விளையாட்டு வீரர் வேகமாக ஓடும் நிலையில் உள்ள பிற விளையாட்டு வீரர்களைப் போல ஓடக்கூடாது என எதிர்பார்க்கப்படும்.

பயிற்சியாளருக்கு இது விநோதமாகப் பட்டது. ``ஏன் இந்த வீரர் தன் பணி என்ன என்று தெரியாமல் பிற வீரர்களைப் போல ஓடவேண்டும் ?" என்று தனக்குள் கேட்டுக்கொண்டார்.

அந்த வீரரின் செயல்பாட்டையும் பல நாட்கள் தோல்வியுறுவதையும் உற்றுக் கவனித்துவந்த பயிற்சியாளர் அந்த வீரரிடமே கேட்பது என முடிவுசெய்து. ``பின்புறமாக ஓடித் தோல்வி அடைவதை விடப் பிற நடுக்கோட்டு விளையாட்டு வீரர் போல விளையாடி வெற்றிபெற முன்னுரிமை தரக் கூடாதா ?" என்று கேட்டார்.

அந்த வீரர் சொன்ன பதிலைக் கேட்டுப் பயிற்சியாளர் வியப்புற்றார். அவர் சொன்னார். ``நடுக் கோட்டு வீரர்களில் சிறப்பாக இருப்பதற்காக நான் இங்கு வரவில்லை. அதை என்னால் செய்ய முடியும் என்பதும் எனக்கு முன்பே தெரியும். வேகமாக ஓடுவதைக் கற்றுக் கொள்ளவே நான் இங்கு வந்தேன். ஒவ்வொடு நாளும் நான் தோற்றது உண்மைதான்.

www.prepp.in

ஆனால் நாளுக்கு நாள் என் முயற்சியில் நான் முன்னேறி வந்தேன் என்பதை நீங்கள் கவனித்திருக்கலாம்," என்றார்.

இந்த விளக்கம் நமது ஆன்மீக முன்னேற்றத்தின் இரகசியத்தைக் கூறுவதாக உள்ளது. உலகியலில் நம்மைச் சிறந்தவர்களாகக் காட்டிக் கொள்ளவே நாம் ஆசைப்படுகிறோம். ஆன்மீகப் பணி என வரும்போது நாம் நம்மைக் கடவுளிடமிருந்து மறைக்க முடியாது. நமது முன்னேற்றம் கடவுளுக்குத் திறந்த புத்தகமாக விளங்குகிறது. ஆன்மீகத்தில் முன்னேறத் தேவையான இறையருளை உண்மையான, உள்ளார்ந்த முயற்சியாலேயே பெறமுடியும். படைத்தவனிடம் ஆன்மீக வெற்றியையோ தோல்வியையோ நாம் மறக்க முடியாது.

விளையாட்டு வீரருக்கு ஒன்று தெளிவாகத் தெரிந்தது. பண்டைய புகழைக் கொண்டு வாழ முனைந்தால் முன்னேற முடியாது என்பதுதான் அது. தன்னைத் தானே அறைகூவியே மேம்படுத்திக் கொள்ள முடியும் என அவர் அறிந்தார். ஓட்டத்தில் தனது பலவீனத்தை அறிந்துகொண்டு அதனை மேம்படுத்தவே அவர் முயன்றார். தன்னினும் சிறந்தவர்களிடையே தன்னை இருத்தித் தன்னை மேப்படுத்திக்கொள்ள அவர் முயன்றார். அந்த முயற்சியில் அவருடைய குறைகள் பிறருக்குப் புலப்பட்டிருந்தாலும். அவற்றைக் களையவே அவர் முயன்றார். அவர் தன் முயற்சியில் வாகைசூடிப் பேரும் புகழும் பெறுவார்.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

கால்பந்து விளையாட்டு வீரர் பிற ஓட்டக்காரர்கள் என்ன செய்துகொண்டிருநதார்கள் என்று உற்றுக் கவனித்தார். தன் திறமையை வளர்த்துக் கொள்ள அவர் முற்பட்டார், அடுத்த முறை மேலும் சிறப்பாகச் செயல்பட சென்ற முறை நேர்ந்த தோல்விகள் பயன்பட்டன. அவருடைய தொடர் முயற்சியில் தோல்வி இழப்புக்கள் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்தன. நாம் நமது தோல்விகளிலிருந்து அடுத்த முறை இன்னும் சிறப்பாக எப்படிச் செய்வது என்று நாள்தோறும் பாடம் கற்க வேண்டும். தொடர்ந்து நாம் முயன்றால், முந்தைய நாளினும் அடுத்து வரும் நாள்களில் தோல்விகள் குறைந்தவையாக இருக்கும். காலப் போக்கில் தோல்வியே இல்லா நிலையை நாம் எட்டிப் பிடிக்க முடியும்.

நமது குறைகளை, தோல்விகளைக் கடவுளிடமிருந்து மறைக்கமுடியாது. அவர் எல்லாம் அறிந்தவர். தோல்விகளைக் கடப்பதற்கான நேர்மையான முயற்சிகளையே கடவுள் எதிர்பார்க்கிறார். நேர்மையாக நாம் முயன்றும். தோல்வி வருமாயின், நமது நேர்மையைக் கடவுள் மதிப்பார். அவர் நமது முயற்சியைப் புரிந்து கொண்டு அருள்பொழிவார். நாம் இன்னும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தால் நாம் அவருடைய உதவியை நாடலாம். இறைவன், தோல்வியைக் கடந்து வாகை சூட உதவும் ஊக்கத்தைத் தருவார். அந்த ஊக்கத்தில் தோல்விகளைக் களைந்து வெற்றிபெற்று முன்னேற்றம் காணலாம்.

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

**Q4.** பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க. *20*

Most people involved in the film production industry know that there is a constant evolution. The change is in the way movies are made, discovered, marketed, distributed, shown, and seen. Following independence in 1947, the 1950s and 60s are regarded as the 'Golden Age' of Indian cinema in terms of films, stars, music and lyrics. The genre was loosely defined, the most popular being 'socials', films which addressed the social problems of citizens in the newly developing state. In the mid-1960s, camera technology revolutionized the documentary method by enabling the synchronized recording of image and sound. Today, CINEMA 4D users are free to create scenes without worrying about the size of objects or how many objects are in the scene, shaded settings, texture size, multipass-rendering or eye-catching particle systems.

Until the 1960s, film-making companies, many of whom owned studios, dominated the film industry. Artistes and technicians were either their employees or were contracted on a long-term basis. Since the 1960s, however, most performers went the freelance way, resulting in the star system and huge escalations in film production costs. Financing deals in the industry also started becoming murkier and murkier, since then. According to estimates, the Indian film industry has an annual turnover of ₹ 60 billion. It employs more than 6 million people, most of whom are contract workers as opposed to regular employees. In the late 1990s, it was recognized as an industry.

More money impacted the perception, visual representation, and definitions of reality. Like any other media of mass communication, the themes are relevant to their times.

Thus, film-making became more expensive and riskier. As opposed to the time of the Gemini Studios, when only 5 percent of a movie was shot outdoor, film-makers often select overseas locations in order to create greater realism, manage costs more efficiently or source people and props. Film-makers spend considerable time scouting for the perfect location.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

**Q5.** பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக. *20*

மகிழ்ச்சி உணர்வை உண்டாக்கக்கூடிய மக்கள், பொருள்கள், சூழல்கள் ஆகியவற்றின் திறம் அல்லது இயல்பே நகைச்சுவை எனப்படும். நகைச்சுவை என்னும் தொடர் மகிழ்ச்சியூட்டும் ஒரு வகை அல்லது அத்தகு உணர்வை எழுப்பும் மனித உரையாடல் அல்லது மக்களைச் சிரிக்கவைக்கவோ மகிழும்படி செய்யவோ உதவுவது என்னும் பொருளை உள்ளடக்கியது ஆகும்.

மதிப்பிடும் செயல் அல்லது ஒன்றைத் தெளிவுபடுத்தும் விளக்கும் செயல்தான் விமரிசனம் எனப்படும். ஆக்கபூர்வமான விமரிசனம் என்பது கருத்துப் பரிமாற்ற முறைகளுள் ஒன்று. உரிமையல்லாத ஒரு வகையில் ஒருவனின் நடத்தையைச் சரி செய்ய மற்றொருவன் முயல்கிறான். இதனைப் பொதுவாக ஒருவன் செய்வது சமூகத்திற்கு உகந்தது அல்ல என்னும் பொருண்மையில் ஆகிய விவேகமான அணுகுமுறை எனலாம். ஒரு கட்டளையாகவோ, ஒரு அவமானப்படுத்துவதாகவோ இல்லாமல் அமைதியான, செம்மையான முறையில் சரிப்படுத்தும் முயற்சி என்பதால் இது ஆக்கபூர்வமானது ஆகும்.

எள்ளல் அல்லது அங்கதம் என்பது அத்தகைய ஒரு கருவியாக விமரிசகனால் ஆளப்படுகிறது. நகைப்பாகவும்

கேலியாகவும் இது வழக்கமாக இருந்த போதிலும் இதன் முதன்மை நோக்கம் நகைச்சுவை அல்ல ; ஒரு நிகழ்ச்சி, ஒரு தனிப்பட்டவர் அல்லது ஒரு குழு குறித்த மதிநுட்பம் சார்ந்த விமரிசனமே ஆகும்.

இலக்கியக் கலைச் சொற்களுள் மிகவும் நுட்பமானது எள்ளல் ஆகும், இதற்குக் குறிப்பிட்ட இலக்கு உண்டு. அந்த இலக்கு ஒரு ஆளாகவோ, ஆட்களின் கூட்டமாகவோ, ஒரு கருத்தாகவோ, ஒரு மனப்பானமையாகவோ, ஒரு நிறுவனமாகவோ, ஒரு சமூக வழக்கமாகவோ இருக்கலாம். எப்படி இருப்பினும் இலக்கு நகையாடப்படுகிறது. கோபமும் நகைச்சுவையும் கலந்ததாக எள்ளல் அமைவதால், அது ஆழமாக இன்னல் உண்டாக்குவதாக அமைகிறது. இது முக்கியமாக கேலி செய்வதாக இருப்பதால் அதன் கனத்த பொருண்மையிலான எகத்தாளமாக அல்லது ஏளனமாகத் தவறாகக் கருதப்படுகிறது.

இது ஒரு கலை வடிவம். இவ்வடிவத்தில் தனிமனித அல்லது மனித குலத் தீமைகள், கேடுகள், இழிவுகள், குறைபாடுகள் போன்றவை கேலி, நகையாடல் கிண்டல் போன்ற முறைகளில் விமரிசனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன. இலக்கியமும் நாடகமும் இதன் முதன்மையான வாகனங்கள். எனினும், திரைப்படங்கள், காட்சிக் கலைகள், அரசியல் கருத்துப் படங்கள் போன்ற பிற ஊடகங்களிலும் இதனைக்

www.prepp.in

Prepp Your Personal Exams Guide

காணலாம். ஹொரேசு என்பவர் கருத்துப்படி, அங்கதவாதி அல்லது எள்ளல்வாதி என்பவர் ஒவ்வோரிடத்திலும் குறைகளைக் காண்பவராக இருப்பினும் கோபம் கொள்ளச் செய்யக் கூடியவராக இல்லாமல் மென்மையான நவைச்சுவை இழையோடச் செய்யக் கூடியவராகப் போற்றத்தக்கவராக விளங்குபவர் ஆவார்.

**Q6. (அ) கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** 5

(i) அமைதிப்பூங்கா

(ii) புத்துணர்ச்சி

(iii) மறுமலர்ச்சி

(iv) தள்ளாட்டம்

(v) ஏற்றத்தாழ்வு

**(ஆ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.** 5

(i) பொற்றாமரை

(ii) தீக்குளிப்பு

(iii) பைந்தமிழ்

(iv) பனையோலை

(v) ஆற்றுமீன்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

(இ) கீழ்க்காணும் சொற்களுக்கு எதிர்ச் சொற்களை எழுதுக. *5*

(i) ஏறக்குறைய

(ii) எழுச்சி

(iii) மென்மை

(iv) இகழ்ச்சி

(v) தளர்ச்சி

(ஈ) கீழ்க்காணும் சொற்களின் பிழைநீக்கி எழுதுக. *5*

(i) தொடைப்பம்

(ii) கிலறு

(iii) கேநி

(iv) சணிக்கிழமை

(v) நாயிறு

(உ) கீழ்க்காணும் இரண்டனுள் ஏதேனும் ஒன்று குறித்து ஐந்து சொற்றொடர்களில் ஒரு பத்தி எழுதுக. *10*

(i) பெண்கல்வி

(ii) மன ஒருமைப்பாடு



Prepp Your Personal Exam Guide

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

(ஊ) கீழ்க்காணும் சொற்களின் பொருள் வேறுபாட்டை ஏற்ற சொற்றொடர் களில் அமைத்துக் காட்டுக. *10*

(i) அலம் — அளம்

(ii) இரை — இறை

(iii) கோல் — கோள்

(iv) கிழவி — கிளவி

(v) வெல்லம் — வெள்ளம்

Prepp Your Personal Exam Guide